**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் OS.No.205/2012 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | திலீப் |
| த/பெ. | தங்கராஜ் |
| வயது | 39 |
| வசிப்பிடம் | எண்.1/46, துலுக்காணத்தம்மன் கோவில் தெரு, பெருமாட்டுநல்லூர், கூடுவாஞ்சேரி, வண்டலூர் தாலுக்கா. |
| தொழில் | ஓட்டுநர் |

**முதல் விசாரணை 24.10.2025**

நான் இந்த வழக்கில் 3ம் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 26.12.1972 தேதியிட்ட என் பாட்டனார் செங்கேனி கிரயம் பெற்ற கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. 19.06.2012 தேதியிட்ட பாகப்பிரிவினை கோரி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.2. 23.06.2012 அன்று 1ம் பிரதிவாதி எனக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அசல் வா.சா.ஆ.3. 28.03.2011 தேதியிட்ட 2ம் பிரதிவாதி, 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 30.03.2011 தேதியிட்ட தாவா சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5. 14.06.2012 தேதியிட்ட 3ம் பிரதிவாதி, 4 முதல் 9 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6. 29.06.2012 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.7. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)